# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2187/2 - 2020 අගෝස්තු මස 03 වැනි සඳුදා - 2020.08.03

*2187/2 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 03 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## *சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்*

*எனது இல. : பிஎஸ்/சிஎஸ்ஏ/00/1/2/3*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அவர்களினால் செய்யப்படும் பிரகடனம்**

*முத்திரை*

கோட்டாபய ராஜபக்ஷ

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33 ஆவது உறுப்புரையின் (2) (இ) உப உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அரசியலமைப்பின் 70 ஆவது உறுப்புரை மற்றும் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 10 ஆவது பிரிவின் மூலம் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, 2165/8 ஆம் இலக்கம் மற்றும் 2020, மாச்சு மாதம் 02 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் மூலம், 2020, மாச்சு மாதம் 02 ஆந் திகதி நள்ளிரவு தொடக்கம் நடைமுறைக்கு வருமாறு பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு 2020, ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதியை பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் திகதியாகவும், 2020, மே மாதம் 14 ஆந் திகதியைப் புதிய பாராளுமன்றம் கூடுகின்ற திகதியாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாதலாலும்,*

*மேலும் கொவிட்-19 தொற்றுநோய் நிலைமையின் விளைவாக 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 24(3) ஆம் பிரிவுக்கமைய தேர்தல் ஆணைக்குழு செயற்பட்டு பாராளுமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் தேர்தல் நடாத்தப்படும் திகதி 2020, ஓகத்து மாதம் 05 ஆந் திகதியாக 2179/17 ஆம் இலக்கம் மற்றும் 2020, யூன் மாதம் 10 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாதலாலும்,*


1A - G 32326 — 377 (2020/08)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையின் (2) (இ) உப உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அரசியலமைப்பின் 70 ஆம் உறுப்புரையின் (1) ஆம் உப உறுப்புரையின் மூலம் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு 2020, ஓகத்து மாதம் 20 ஆந் திகதி புதிய பாராளுமன்றம் கூட்டப்படும் என்பது இத்தால் பிரகடனப்படுத்தப்படுகின்றது.

இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு ஓகத்து மாதம் 03 ஆம் நாளாகிய இன்று கொழும்பில் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.